# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## அரையாண்டுத் தேர்வு

## 2016- 2017

## தமிழ்மொழி

### வளர் தமிழ் 9

# விடைகள்

www.tamiledc.com

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. இலங்கைத்தீவின் தொல்குடிகள்

அ) சிங்களவர் ஆ) தமிழர் இ) ஆங்கிலேயர் ஈ) பறங்கியர்

அ) □ ஆ) ■ இ) □ ஈ) □

2. கடற்கரையில் படம் கீறுவது

அ) ஆமை ஆ) இறால் இ) நண்டு ஈ) முதலை

அ) □ ஆ) □ இ) ■ ஈ) □

3. அமெரிக்கப் பென்சில்வேனியப் பல்கலைக்கழகம் கந்தரோடையில் ஆய்வுகளை மேற்கொண்ட ஆண்டு

அ) 1979 ஆ) 1969 இ) 1989 ஈ) 1879

அ) ■ ஆ) □ இ) □ ஈ) □

4. நடந்தனர் என்பதன் பகுதி

அ) த் ஆ) அர் இ) நட ஈ) ந்

அ) □ ஆ) □ இ) ■ ஈ) □

5. மகாவம்சம் வரலாற்று நூலல்ல எனக் கூறியவர்

அ) ஈ. டபிள்யூ. அதிகாரம் ஆ) சிறிலால் கொடிகார

இ) லயனல் சரத் ஈ) ஏ. ஈ. குணசிங்க

அ) □ ஆ) ■ இ) □ ஈ) □

6. உயிர்மெய்யெழுத்துகள்

அ) 12 ஆ) 18 இ) 30 ஈ) 216

அ) □ ஆ) □ இ) □ ஈ) ■

தமிழர் கல்விப் பேரவை

7. வருவான் என்ற சொல்லின் இடைநிலை

அ) வா ஆ) வ் இ) ஆன் ஈ) வரு

அ) □ ஆ) ■ இ) □ ஈ) □

8. யாழ்மாவட்டத்தில் தொல்குடித் தமிழரது ஈமப்பொருட்கள் காணப்பட்ட இடங்களில் ஒன்று

அ) கந்தரோடை ஆ) குருகில்கின்ன

இ) மாந்தை ஈ) கொக்காபே

அ) ■ ஆ) □ இ) □ ஈ) □

9. வானவில் என்பது ______________ புணர்ச்சி.

அ) தோன்றல் ஆ) திரிதல் இ) கெடுதல் ஈ) இயல்பு

அ) □ ஆ) □ இ) ■ ஈ) □

10. புதியதொரு வீடு என்ற நாடகத்தை எழுதியவர்

அ) மகாகவி உருத்திரமூர்த்தி ஆ) அழ. வள்ளியப்பா

இ) பாரதியார் ஈ) தனிநாயகம் அடிகள்

அ) ■ ஆ) □ இ) □ ஈ) □

11. கிறுகிறுத்தல் என்பது

அ) தன்னை நினைத்தல் ஆ) தன்னை வாழ்த்துதல்

இ) தன்னை மறத்தல் ஈ) தன்னை ஒறுத்தல்

அ) □ ஆ) □ இ) ■ ஈ) □

12. மணிமேகலை ______________ இயற்றப்பட்டது.

அ) கி.பி 3 ஆம் நூற்றாண்டில் ஆ) கி.பி 4 ஆம் நூற்றாண்டில்

இ) கி.பி 5 ஆம் நூற்றாண்டில் ஈ) கி.பி 2 ஆம் நூற்றாண்டில்

அ) □ ஆ) □ இ) □ ஈ) ■

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

13. பால் கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின். என்ற பாடல் இடம் பெற்ற நூல்

அ) சிலப்பதிகாரம்   ஆ) புறநானூறு   இ) மூதுரை   ஈ) நல்வழி

அ) ☐   ஆ) ■   இ) ☐   ஈ) ☐

14. திருக்குறளை சீன மலாய் மொழிகளில் மொழி மாற்றுவித்தவர்

அ) பாவேந்தர்   ஆ) காளமேகம்

இ) தனிநாயகம் அடிகள்   ஈ) விபுலாநந்தர்

அ) ☐   ஆ) ☐   இ) ■   ஈ) ☐

15. பின்வருவனவற்றுள் அஃறிணைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) வந்தான்   ஆ) ஓடின   இ) படிக்கின்றாள்   ஈ) சிரித்தனர்

அ) ☐   ஆ) ■   இ) ☐   ஈ) ☐

16. பின்வருவனவற்றுள் பகாச்சொல்

அ) பொன்னன்   ஆ) ஊர்   இ) தமிழர்   ஈ) கவிஞர்

அ) ☐   ஆ) ■   இ) ☐   ஈ) ☐

17. மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற பாடலில் கூறப்பட்ட தொழில்

அ) கடற்றொழில்   ஆ) உழவுத்தொழில்

இ) மீன்பிடித்தொழில்   ஈ) கைத்தொழில்

அ) ☐   ஆ) ■   இ) ☐   ஈ) ☐

18. கோ என்ற சொல் குறிப்பது

அ) இறைவனை   ஆ) தந்தையை   இ) அரசனை   ஈ) ஆசிரியரை

அ) ☐   ஆ) ☐   இ) ■   ஈ) ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

19. முள் + பற்றை என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) முள்ப்பற்றை  ஆ) முட்பற்றை  இ) முற்பற்றை  ஈ) முள்பற்றை

அ) ☐  ஆ) ■  இ) ☐  ஈ) ☐

20. கார் முகிலைக் கண்ட அழகு மயில்கள் களிப்பில் ஆலின. இதில் வந்துள்ள எழுவாய் அடைமொழி

அ) கார்  ஆ) அழகு  இ) களிப்பு  ஈ) மயில்கள்

அ) ☐  ஆ) ■  இ) ☐  ஈ) ☐

21. கடல் போன்ற அறிவு என்ற உவமை அணியில் இடம்பெற்றுள்ள உவமானம்

அ) கடல்  ஆ) போன்ற  இ) அதிகம்  ஈ) அறிவு

அ) ■  ஆ) ☐  இ) ☐  ஈ) ☐

22. பெரியபெரிய என்பது

அ) இரட்டைக்கிளவி  ஆ) அடுக்குத்தொடர்

இ) இணைமொழி  ஈ) அடுக்கிடுக்குத்தொடர்

அ) ☐  ஆ) ■  இ) ☐  ஈ) ☐

23. தனிநாயகம் அடிகளின் இயற்பெயர்

அ) மயில்வாகனன்  ஆ) சேவியர்  இ) வரதன்  ஈ) தேவநேசன்

அ) ☐  ஆ) ■  இ) ☐  ஈ) ☐

24. இலங்கையின் முதற்குடிகளான தமிழர் கையாண்ட முதற் கருவி

அ) கத்தி  ஆ) கோடரி  இ) வாள்  ஈ) கல்

அ) ☐  ஆ) ☐  இ) ☐  ஈ) ■

தமிழர் கல்விமேம்பாட்டுப் பேரவை

25. உலகில் முதல் மாந்தத் தோற்றம் நிகழ்ந்த இடம்

அ) ஐரோப்பாக்கண்டம் ஆ) ஆபிரிக்கக்கண்டம்

இ) ஆசியக்கண்டம் ஈ) குமரிக்கண்டம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ■

26. பொற்சிலை என்பதைப் பிரித்து எழுதினால்

அ) பொற் + சிலை ஆ) பொன் + சிலை

இ) பொற்க் + சிலை ஈ) பொற் + ச்சிலை

அ) ☐ ஆ) ■ இ) ☐ ஈ) ☐

27. நாகதீபம் பற்றிய செய்தி இடம் பெற்ற நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ) சீவகசிந்தாமணி

இ) வளையாபதி ஈ) மணிமேகலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ■

28. பின்வருவனவற்றில் அடுக்கிடுக்குத்தொடர்

அ) உயரஉயர ஆ) கலகல இ) தன்னந்தனியே ஈ) பளபள

அ) ☐ ஆ) ☐ இ) ■ ஈ) ☐

29. பார்த்தனன் என்ற சொல்லின் சாரியை

அ) பார் ஆ) த் இ) அன் ஈ) அத்து

அ) ☐ ஆ) ☐ இ) ■ ஈ) ☐

30. பிரித்தானியாவைச் சேர்ந்த நாடக ஆசிரியர்

அ) சாவோ ஆ) கோமர் இ) வெர்சில் ஈ) சேக்ச்பியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ■

| |
|---|
| விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடப்பட்டிருந்தால் ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி. |

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

உயிர்கள் வாழ்வதற்கு உணவு அகத்தியமானது. உணவு இல்லையென்றால் எந்த உயிரும் வாழமுடியாது. இத்தகைய உணவைப் பெற்றுக் கொள்வதற்கு மாந்தன் நாளும் போராடிக்கொண்டிருக்கின்றான். எத்தியோப்பியா, சோமாலியா போன்ற நாடுகளில் உணவுப்பற்றாக்குறை அதிகம் காணப்படுகின்றது. இந்நாடுகளில் நாளுக்குநாள் பசியினால் குழந்தைகள் முதல் பெரியோர்வரை இறக்கின்றனர். இன்று உலக மக்கள் தொகை அதிகரித்துக்கொண்டே போகின்றது. இம் மக்கள் தொகை 2050 இல் 960 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இம் மக்கள் தொகை அதிகரிப்புக்கு ஏற்ப உணவு உற்பத்தி அதிகரிக்க வேண்டும். அதற்கு உணவு உற்பத்தி முறையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். உணவு வீணாக்கப்படுதல் தவிர்க்கப்படல் வேண்டும். மொத்தக் கூல உற்பத்தியில் 280 மில்லியன் தொன் கூலங்கள் வீணடிக்கப் படுவதாகப் புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன. அதே நேரம் 100 கோடி மக்கள் பசியால் துன்பப்படுவதாகக் கூறப்படுகின்றது. எம்மால் இயன்றவரை நாம் உணவுகளை வீணாக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒக்ரோபர் 16 ஆம் நாளை உலக உணவு நாளாக ஐ.நா அறிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

1. எதற்கு மாந்தன் போராடிக்கொண்டிருக்கின்றான்?

*உணவைப் பெற்றுக் கொள்வதற்கு மாந்தன் போராடிக் கொண்டிருக்கிறான் .*

2. எவை தவிர்க்கப்படல் வேண்டும் எனக் கூறப்படுகின்றது?

*உணவு வீணாக்கப்படுதல் தவிர்க்கப்பட வேண்டும் எனக் கூறப்படுகிறது .*

3. உணவு உற்பத்தியை அதிகரிக்க என்ன செய்ய வேண்டும்?

*உணவு உற்பத்தியை அதிகரிக்க உணவு உற்பத்தி முறையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் .*

4. எந்நாளை உலக உணவு நாளாக ஐ. நா அறிவித்துள்ளது?

*ஒக்ரோபர் 16 ஆம் நாளை உலக உணவு நாளாக ஐ . நா அறிவித்துள்ளது .*

5. எவை வீணாக்கப் படுவதாகக் கூறப்படுகின்றது?

*கூலங்கள் வீணாக்கப்படுவதாகக் கூறப்படுகிறது .*

முழுவிடை ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள்.

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**3) பாடநூல் வினா - ஏழில் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. விசயன் வருவதற்கு முன்னரே இலங்கையின் தென்பகுதியிலும் வடபகுதியிலும் பேரரசுகளை அமைத்திருந்தவர்கள் யாவர்?

**இயக்கர், நாகர்**

2. "கோலுக்கே இந்தப் பயம் கொள்கிற பிள்ளாய் நீ நாளை வேலுக்குப் போர் முனையில் என்ன பதில் சொல்வாய்". இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

**வீரத்தாயினால் மகனுக்குக் கூறப்பட்டது.**

3. நெல்லுப்பொதி சுமந்து கூத்தாடும் பயிர் எதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது?

**தங்க நகைகள் தலைக்கணிந்த பெண்களுக்கு.**

4. பெருங்கற்கால மக்களின் தொழில்கள் இரண்டைத் தருக.

**வேட்டையாடல், வேளாண்மை, மந்தை வளர்ப்பு, மட்பாண்டம் வனைதல்.**

( இவற்றில் ஏதாவது 2)

5. தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற பாரதியின் கனவை நனவாக்கியவர் யார்?

**தனிநாயகம் அடிகளார்**

6. மீனவர்கள் எதைக் கொண்டு காலமறிந்து கடலோடுகின்றனர்?

**விடிவெள்ளியை**

7. தனிநாயகம் அடிகளார் இறுதியாக வெளியிட்ட நூல் யாது?

**தமிழ்மறை விருந்து**

விடைகள் ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள். *ஏழு வினாக்களில் ஏதாவது ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதியிருக்க வேண்டும். ஏழு வினாக்களுக்கும் விடைகள் எழுதியிருந்தால் முதல் ஐந்து வினாக்களுக்கு மட்டுமே புள்ளிகள் இடவேண்டும்.*

புள்ளிகள் 10



தமிழ்க் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**4) பொருத்தமான சொற்களை எழுதிக் கவிதையை ஆக்குவோம்.**

## புறப்படுவீர்

| | | | | |
|---|---|---|---|---|
| வாழ்ந்தாலும் | இனித்திடும் | கலந்து | காக்க | பைந்தமிழை |

*முதற் கண்ட எவற்றிலும் முதலான நம் தமிழை*
*கற்கண்டாய்* **இனித்திடும்** *கனிவான தேன் தமிழை*
*கணப்பொழுதும் கைக்கொண்டு மறவாமல்*
*கண்ணைப்போல் நாளும் போற்றிடுவீர்*

*ஆங்கிலத்துடன்* **கலந்து** *தமிழை அழிக்க நினைக்காதீர்*
*தீங்கான வடமொழியைக் கலந்து நீர் பேசாதீர்*
*பாங்குடனே எம்* **பைந்தமிழை** *ப் பண்புடனே பேசிடுவீர்*
*பொங்கு தமிழின் புகழ்தனை எங்கும் பரப்பிடுவீர்*

*எம் தமிழைக்* **காக்க** *சோர் வின்றி உழைத்திடுவீர்*
*எட்டுத்திக்கும் தமிழன் புகழ்பேச வைத்திடுவீர்*
*எங்கே* **வாழ்ந்தாலும்** *இனிய தமிழ் பேசி மகிழ்ந்திடுவீர்*
*எம் மொழியைக்காக்கக் புயலாகப் புறப்படுவீர்*

பொருத்தமான ஒவ்வொரு நிரப்பலுக்கும் 02 புள்ளிகள்.
(விடையில் எழுத்துப்பிழையிருப்பின் புள்ளிகள் இல்லை)

புள்ளிகள் 10



தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. தரப்பட்டுள்ள சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுவோம்.

அ) தாலாட்டு :-
**குழந்தையை உறங்கவைக்கத் தாலாட்டுப் பாடுவர்.**

ஆ) கற்காலம் :-
**கற்கால மாந்தன் குகைகளில் வாழ்ந்தான்.**

இ) ஈமத்தாழி :-
**பழந்தமிழர் இறந்தோரை ஈமத்தாழிகளில் வைத்து அடக்கம் செய்தனர் .**

2. பின்வரும் உவமை அணியின் உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பவற்றைத் தருக.

தேன் போன்ற தமிழ்

உவமானம் :- **தேன்**

உவமேயம் :- **தமிழ்**

பொதுத்தன்மை :- **இனிமை**

3. பின்வரும் சொற்களின் புணர்ச்சி வகைகளைத் தருக.

பற்பொடி :- **திரிதல்**

புல்வெளி :- **இயல்பு**

மல்லிகைப்பூ :- **தோன்றல்**

4. அ. கருத்தடிப்படையில் சொல்லியங்கள் எத்தனை வகைப்படும்?
**நான்கு ( 4 )**

ஆ. ஏதாவது இரண்டிற்கு எடுத்துக்காட்டுத் தருக.

**கூற்று - பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றினார். வினா - தொல்காப்பியத்தை எழுதியவர் யார் ?**

**ஏவல் - உன் தாயகத்தை என்றும் மறவாதே ! மெய்ப்பாடு - குழந்தையின் சிரிப்பு என்னே அழகு!**



தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

5. அ) பெயர்ச்சொற்கள் எத்தனை வகைப்படும்?

**ஆறு வகைப்படும் (6)**

ஆ) பின்வருவன ஒவ்வொன்றுக்கும் இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

குணப்பெயர் :- **வட்டம், நீலம்** **இனிப்பு, அன்பு**

தொழிற்பெயர் :- **பொரித்தல் , ஆடுதல்** **நடத்தல்**

**- பொருத்தமான விடைக்குப் புள்ளி வழங்கவும் -**

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

அரசினால் வழங்கப்படும் நூலகம், பள்ளி, மருத்துவமனை போன்ற இடங்களையும் அங்கு காணப்படும் இருக்கைகள், மேசைகள், நூல்கள் போன்றவற்றையும் நாம் பொதுச்சொத்துகள் என்கின்றோம். பொதுச்சொத்துகளைப் பாதுகாப்பது ஒவ்வொருவருடைய கடமையுமாகும். ஏனெனில் எமது நன்மைக்காகவே அரசினால் இப்பொதுச்சொத்துகள் எமக்கு வழங்கப்பட்டுள்ளன. நாளை அதே பொருட்கள் வேறு ஒருவருக்கும் பயன்படும். எனவே நாம் பொதுச்சொத்துகளுக்குக் கேடு விளைவிக்காது அவற்றைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கும் பயன்படுமாறு செய்தல் வேண்டும்.

*கருத்து மாறாத சரியான மொழி பெயர்ப்புக்கு 05 புள்ளிகள்.*
*எழுத்துப்பிழையை கருத்தில் கொள்ளவும்.*

புள்ளிகள் 05

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ மீண்டும் தொடங்கும் மிடுக்கு
- ✸ சூழல் மாசடைதலும் அவற்றைத் தடுக்கும் வழிவகைகளும்
- ✸ நீர் வாசித்து மகிழ்ந்த கதை ஒன்று

புள்ளிகள் 20

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை